# கழக இளைஞர் அணி - சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புக்கு நேர்காணல்!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் மேற்கொண்டார்!



இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) கழக இளைஞர் அணியின் முதல் நான்கு மண்டலங்களுக்கு உட்பட்ட சென்னை தெற்கு, திருவள்ளூர் மேற்கு, திருவண்ணாமலை வடக்கு, வேலூர் வடக்கு, தர்மபுரி மேற்கு, சேலம் கிழக்கு, ஈரோடு மத்திய ஆகிய மாவட்டங்களில் காலியாக உள்ள இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர்கள் பிரபு கஜேந்திரன், பி.எஸ். சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் நேர்காணல் செய்தார்.



இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (27.12.2025) கழக இளைஞர் அணியின் மண்டலம் 8–க்கு உட்பட்ட தென்காசி வடக்கு, தென்காசி தெற்கு ஆகிய மாவட்டங்களிலிருந்து சமூக வலைதள துணை அமைப்பாளர் பொறுப்புகளுக்கு விண்ணப்பித்திருந்தவர்களை, மாநில துணைச் செயலாளர் ஜி.பி.ராஜா முன்னிலையில் நேர்காணல் செய்தார்.



கழக இளைஞர் அணிச் செயலாளர் – துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (27.12.2025) கழக இளைஞர் அணியின் சமூக வலைதளப்பணிகளை ஒருங்கிணைக்கும் விதமாக கழக மாவட்டத்துக்கு ஒரு துணை அமைப்பாளரை பரிந்துரை மற்றும் நேர்காணல் மூலம் நியமித்து வரும் நிலையில் இளைஞர் அணி மண்டலம் – 3 க்குட்பட்ட இராணிப்பேட்டை, காஞ்சிபுரம் தெற்கு, காஞ்சிபுரம் வடக்கு, திருப்பத்தூர், திருவண்ணாமலை தெற்கு, திருவண்ணாமலை வடக்கு, வேலூர் தெற்கு, வேலூர் வடக்கு ஆகிய கழக மாவட்டங்களில் சமூக வலைதளத்துக்கென நியமிக்கப்பட்டுள்ள மாவட்ட துணை அமைப்பாளர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றனர்.


